# திராவிடத்தால் வாழ்கிறோம்

854

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

112

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **பேராசிரியர் மா.நன்னன்** அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# பேராசிரியர் மா.நன்னன்

# எழுத்து, செயல், சிந்தனை எல்லாம் கழகம்!



இன்றைய கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்து, இளைஞர்களை வழிநடத்திய காலங்களில், இளைஞர் அணியின் பாசறைக் கூட்டங்களில் தவறாமல் இடம் பெறுவார் அந்தத் தமிழ்ப்புலவர், பேராசிரியர். விழுப்புரத்தில் நடைபெற்ற பாசறைக் கூட்டமொன்றில், அந்தப் பேராசிரியரின் விரல்களுக்கு, தங்கக் கணையாழி அணிவித்துப் பெருமை செய்தார் கழகத் தலைவர். அண்ணாவுடனும், கலைஞருடனும் நெருக்கமாகப் பயணித்த அந்தப் புலவர், பேராசிரியர் மா. நன்னன். முத்தமிழறிஞர் கலைஞரின் உற்றநண்பர், இன்றைய கழகத் தலைவரின் அணுக்கமான வழிகாட்டியாக இருந்த, கொள்கை உடன்பிறப்பு பேராசிரியர்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தை அடுத்த சாத்துக்குடல் எனும் ஊரில், 1924-ஆம் ஆண்டு ஜூலை 30-ஆம் தேதி பிறந்தவர் நன்னன். பெற்றோர் மாணிக்கம் - மீனாட்சி அம்மையார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் திருஞானசம்பந்தன். தமிழ் மீது கொண்ட பற்றால், தனது பெயரை நன்னன் என மாற்றிக் கொண்டார்.

### பள்ளிக்கால அரசியல் ஈடுபாடு

தனது சொந்த ஊரை அடுத்து உள்ள திருமுட்டத்தில் 8-ஆம் வகுப்பு வரைப் படித்த நன்னன், தனது உயர்நிலைக் கல்வியை சிதம்பரத்தில் தொடர்ந்தார். அங்கு புகுமுக வகுப்பு தேர்ச்சி பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று புலவர் பட்டம் பெற்றார்.

தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கி, ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே சென்னை பல்கலைக் கழகத்தில் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். தொல்காப்பியம் பற்றி ஆய்வுசெய்து, முனைவர் பட்டத்தையும் பெற்றார். பள்ளிக்காலங்களில் அரசியல் எழுச்சி பெற்று, 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்திலும் கலந்துகொண்டவர், திராவிட இயக்க உணர்வு பெற்ற பிறகு, பெரியார் மீதும் சுயமரியாதை, பகுத்தறிவுக் கொள்கைகள் மீதும் தீவிரப் பற்றுகொண்டு செயல்படலானார். பள்ளிக் காலத்திலேயே இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கேற்றார். ரயில் நிலையங்களில் இருந்த பெயர்ப்பலகைகளில் இந்தி எழுத்துக்களை அழித்து, கைதாகி சிறை சென்றுள்ளார்.

நீதிக்கட்சியில் தொடங்கி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் எனப் பயணித்து, அண்ணா தனியாக திராவிட முன்னேற்றக் கழகம் கண்டபோது, அவரது தலைமையை ஏற்று மிகத்தீவிரமாக இயங்கியவர் நன்னன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில், பக்தி இலக்கியங்களைப் பயின்றாலும், பெரியார், அண்ணாவின் பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்க அரசியல் செயல்பாடுகளில் தன்னை இணைத்துக் கொண்டார். தமிழ்மொழி மீது ஏற்பட்ட காதலாலும், திராவிட இயக்கத்தின் மீதான பற்றின் காரணத்தாலும், திருஞான சம்பந்தன் என்ற தனது பெயரை நன்னன் என மாற்றிக் கொண்டார். அதன் தொடர்ச்சியாக 'திராவிட நாடு' உள்ளிட்ட ஏடுகளில் எழுதத் தொடங்கினார் நன்னன்.

### பெரியாருடன் பயணம்

கல்லூரிக் காலங்களில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் திராவிட இயக்கப் பிரச்சாரங்கள் செய்வது மட்டுமல்லாமல், வார விடுமுறை நாட்களில் வெளியூர்களுக்கு பிரச்சாரத்துக்குச் சென்றுவிட்டு, திங்கள்தான் கல்லூரிக்குத் திரும்புவார். 1944-ஆம் ஆண்டில், பெரியார் கலந்துகொண்ட கூட்டத்தில் இளம்பேச்சாளராக கலந்துகொண்டு, அவரிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றவர் நன்னன். ஆசிரியர் பணியில் சேர்வதற்கு முன், ஈரோட்டில் 'குடிஅரசு' அலுவலகத்தில் தங்கி, பெரியாருடன் கூட்டங்களுக்குச் சென்று வந்த அன்றைய முன்னோடிகளுடன் இளையவராகப் பயணித்தவர் நன்னன்.

தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கலைக் கல்லூரி, சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரி என இவரது பணியிடங்களில் எல்லாம் தமிழ்ப்பற்றும் பகுத்தறிவுமாக மாணவர்களுக்குப் பாடம் எடுத்தவர். மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய காலகட்டங்களில் கழகத்தின் மேடைகளில் தி.மு.க. கரைவேட்டியுடன் பங்கேற்கக்கூடிய கொள்கைப் பற்றாளராகத் திகழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களை என்றும் மதிக்கும் தொண்டராக, அன்புக்குரிய நண்பராக, மொழிகாக்கும் உரிமைப்போரில் உற்றத் தோழனாகத் திகழ்ந்தவர்.

> எழுத்தால், செயலால், சிந்தனையால் கழக முன்னோடியாக வாழ்ந்த நன்னன் அவர்கள், கழக உணர்வுகளுடன் என்றும் நம்முடன் வாழ்வார்

### கழகப் பணிகளில்..

1991-ஆம் ஆண்டு கழகத்தால் உருவாக்கப்பட்ட 'திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தின்' பொறுப்பினை நன்னன் அவர்களிடம் ஒப்படைத்தார் கலைஞர். அதன்மூலம், திராவிட இயக்கக் கொள்கைகளையும், தமிழ்மொழியின் சிறப்புகளையும் கழகத்தின் இளைய தலைமுறையினருக்கு எடுத்துரைக்கும் பொறுப்பினையும் அவரிடம் தலைவர் கலைஞர் வழங்கினார். அந்தப் பொறுப்புக்கு ஏற்ப கழகத்தின் கூட்டங்களில், கருத்தரங்குகளில் கழக வரலாற்றினை வெள்ளமென முழங்கியவர். இளைஞர் அணிப் பாசறைக் கூட்டங்களில் நன்னன் உரையில்லாமல் நடக்காது என்கிற அளவுக்கு, கழகத்துடன் இணைந்திருந்தார்.

கடவுள் மறுப்பு, பகுத்தறிவுக் கொள்கை, சாதிமறுப்புத் திருமணம், எழுத்துச் சீர்திருத்தம், கைம்பெண் மறுவாழ்வு, மகளிர் சமத்துவம் ஆகியவற்றை ஆதரித்து வந்தார். அத்துடன் சீர்திருத்தத் திருமணங்களை, நல்ல நேரம் பார்க்காமலும், தாலி அணிவிக்காமலும் நடத்தியும் வந்தார். சென்னை தொலைக்காட்சியில் 'எண்ணும் எழுத்தும்' என்ற தலைப்பில், 17 ஆண்டுகள் 'தமிழ் கற்பித்தல்' நிகழ்ச்சியை நடத்தி வந்தார். எழுத்துப் பயிற்றுவித்தலில் 'நன்னன் முறை' என்னும் புதிய முறையை ஏற்படுத்தியவர்.

எழுத்துச் சீர்திருத்தம், பெரியாரிய சிந்தனைகள், சமூகம் சார்ந்த பல நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றில், 'பெரியாரைக் கேளுங்கள்' என்ற நூல், தமிழ் வளர்ச்சித் துறையின் 2009-ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் சமூகவியல் பிரிவில் பரிசு பெற்றது. 'இவர்தாம் பெரியார்', 'பெரியார் கணினி' ஆகிய நூல்களை வெளியிட்டிருக்கிறார். 'பெரியாரியல்' என்ற பெயரில் மொழி, இலக்கியம், கல்வி உள்ளிட்ட பல தலைப்புகளில் புத்தகங்களை எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசின் 'பெரியார் விருது', 'திரு.வி.க. விருது' போன்ற பல விருதுகளையும் பெற்றவர்.

பணிக்காலத்தில் கழகத்தின் பின்புலமாக இயங்கி வந்த நன்னன், ஓய்வுபெற்ற பிறகு நேரடியாகவே கழகப் பணிகளில் ஈடுபடலானார். பேராசியர் நன்னன் அவர்களின் பங்கு இல்லாமல், கலைஞரின் நூல்கள் வெளியானதில்லை எனும் அளவுக்கு இருவருக்குமான நட்பு இறுதிக்காலம் வரை இருந்தது. இன்றைய தலைவர் அவர்களுக்கு அணுக்கமான வழிகாட்டியாக இருந்த பேராசிரியர் நன்னன் அவர்கள், 2017-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 7-ஆம் தேதி, வயது மூப்பு காரணமாக தனது 94-ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

இன்றைய கழகத் தலைவர் நேரில் சென்று மரியாதை செய்து வந்தார். கடந்த ஆண்டு, அவரது நூல்களை அரசுடமையாக்கியதுடன், நூற்றாண்டுக் கொண்டாட்டத்திலும் தலைவர் கலந்து கொண்டார். அப்போது, நன்னன் அவர்களின் நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட தலைவர், "இறப்புக்கு சில மாதங்களுக்கு முன் அறிவாலயம் வந்து என்னை சந்தித்ததுடன், அனைவரையும் பார்த்து ஊக்கப்படுத்திச் செல்ல வேண்டும் என வருகை தந்திருந்தார்" என அவரது கழக உணர்வை நினைவூட்டினார். எழுத்தால், செயலால், சிந்தனையால் கழக முன்னோடியாக வாழ்ந்த நன்னன் அவர்கள், கழக உணர்வுகளுடன் என்றும் நம்முடன் வாழ்வார்.

...துடிக்கும்

## போரில்லா உலகு உருவாகட்டும்!

பாலஸ்தீனத்தின் காசா மீது 19 மாதங்களாகத் தொடர் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது, இஸ்ரேல். ஹமாஸ் படையை மொத்தமாக அழிக்க வேண்டுமென்று, இஸ்ரேல் ராணுவத்திற்கு அந்நாட்டு பிரதமர் நெதன்யாஹு உத்தரவிட்டுள்ளார். ஆனால், பொதுமக்கள் குடியிருப்புகள், முகாம்கள் மீதும் கொடூரத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பதை, அங்கிருந்து வரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. தாக்குதலில் இதுவரை 54,000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் சுமார் 8,000 பெண்கள் அடக்கம். அதாவது தாக்குதல் தொடங்கிய நாளில் இருந்து, ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கும் ஒரு பெண் கொல்லப்பட்டுள்ளார். ஒவ்வொரு 45 நிமிடத்திற்கும் ஒரு குழந்தை உயிரை இழந்துள்ளது.

சுமார் 90,000 டன் குண்டுகள் காசா மீது வீசப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இது ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் வீசப்பட்ட அணுகுண்டுகளின் அளவை விட, கிட்டத்தட்ட 4.5 மடங்கு அதிகம். போர் காரணமாக காசா மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் 5 லட்சம் பேர் பட்டினிக் கொடுமைக்கு ஆளாகும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். 60,000 கர்ப்பிணிப் பெண்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச அமைப்புகள் சார்பில், காசாவிற்கு அனுப்பி வைக்கப்படும் உணவு மற்றும் நிவாரணப் பொருட்களும் முழுமையாகச் சென்றடைவதில்லை.

ஆனால், இவ்விவகாரத்தில் சர்வதேச சமூகம் காட்டும் அமைதி, இஸ்ரேலுக்கு வலிமை சேர்ப்பதாகவே இருப்பதாக, உலகெங்கும் உள்ள 372 முக்கிய எழுத்தாளர்கள் கையெழுத்திட்ட அறிக்கையில் கவலை தெரிவித்துள்ளனர். காசாவில் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு, ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்படையாக கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது. பிரிட்டன், பிரான்ஸ், கனடா நாடுகள் தாக்குதலை, உடனடியாக நிறுத்தக்கோரி இஸ்ரேலை வலியுறுத்தி கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. இஸ்ரேலின் கொடுந்தாக்குதலுக்கு எதிரான சர்வதேச சமூகத்தின் நெருக்கடி அதிகரிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். போரில்லாத உலகம் மலரட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



என்.ஏ.இ.அஜீஸ்கான்



### தலைவர் பிறந்தநாள் புகைப்படம்!

1975-ஆம் ஆண்டு, என்னுடைய 35-வது வயதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்று அவரை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற கோபாலபுரம் இல்லம் சென்றேன். அப்போது, அவருக்கு மாலை அணிவித்து சிறப்பு செய்தபோது, என் கரங்களைப் பற்றிக்கொண்டு புகைப்படம் எடுத்துகொள்ள அனுமதித்தார். இன்றைக்கு 86-வது அகவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை எதிர்நோக்கி, புத்துணர்ச்சியுடன் இந்தப் புகைப்படத்துடன் காத்துக் கொண்டிருக்கிறேன்.

– என்.ஏ.இ.அஜீஸ்கான்,
சேப்பாக்கம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உழவர் உரிமை நாள்!

1961-ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. அது, உழவர்களுக்குப் பலன் தராது குறைந்தபட்ச அளவு 30 ஏக்கர் என்பதை, 15 ஏக்கர் என்று மாற்றவேண்டும் என தி.மு.கழகம் வலியுறுத்தியது. அன்றைய ஆட்சியாளர்கள் ஏற்காத நிலையில், சட்டத்தின் குறைபாடுகளைப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்க சட்டமன்றத்தின் முன், 28-9-1961 அன்று கழகத் தொழிற்சங்கச் செயலாளர் ஏ.கோவிந்தசாமி தலைமையில், பேரணி நடத்தப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131